சுருக்கமான குறிப்பு

# இலங்கையில் அனர்த்த முகாமைத்துவம்

## நிர்வாகத் தோல்விகளை ஆராயும் அறிக்கை



பட உதவி: *Sun Quan Huang*

Verité Research இன் பொருளாதார ஆய்வுக் குழு இந்த ஆய்வினைத் தொகுத்துள்ளது.

இந்தக் குழுவில் அஷானி பஸ்நாயக்க, லஹிரி ஜயசிங்க, தாஷியா நௌகி மற்றும் சுரேனி வீரதுங்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். ஷமாரா வெத்திமுனி எடிட்டோரியல் உதவியை வழங்கியுள்ளார். முழுமையான ஆராய்ச்சி மற்றும் எடிட்டோரியல் மேற்பார்வையை சுபாஷினி அபேசிங்க மற்றும் நிஷான் டி மெல் ஆகியோர் வழங்கியுள்ளனர்.

கருத்துக்கள் மற்றும் பின்னூட்டங்களுக்கு தயவுசெய்து மின்னஞ்சல் அனுப்பவும்: publications@veriteresearch.org.

*Copyright © 2019 Verité Research Pvt Ltd. All Rights Reserved.*

# 1. கண்ணோட்டம்

இலங்கையின் நிர்வாகத்தில் ஏற்படும் தோல்விகளுக்கு பெரும்பாலும் கொள்கை, விதிமுறைகள் மற்றும் சட்டங்களில் ஏற்படும் சிக்கல்களே காரணமாகக் குறிப்பிடப்படுகின்றன. இதன் தொடர்ச்சியாக இந்த மூன்று பிரச்சினைகளுக்குமான தீர்வினை தேடுவதே முக்கிய இலக்காக இருந்து வருகின்றது. இந்த ஆய்வுக் கட்டுரையானது இலங்கையின் நான்காவது முக்கிய அடிப்படைப் பிரச்சினை குறித்து ஆராய்கின்றது: அதுதான் பலவீனமான நிர்வாகப் பிரச்சினை. இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ நிர்வாகம் தொடர்பில் இங்கு முக்கிய கவனம் செலுத்தப்படுகின்றது. எனினும், இதன் மூலம் பிற நிர்வாகங்கள் தொடர்பிலும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

## 1.1. உலகளாவிய நிலை

2017, 2018 மற்றும் 2019 என தொடர்ச்சியாக மூன்றாண்டுகளாக உலக நாடுகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை தீவிர காலநிலை நிகழ்வுகள் என உலக பொருளாதார மன்றத்தினால் வெளியிடப்பட்டுள்ள உலக அபாயங்களுக்கான அறிக்கை குறிப்பிடுகின்றது. தீவிர காலநிலை நிகழ்வுகள், காலநிலை மாற்றங்களை குறைப்பதில் ஏற்பட்டுள்ள தோல்வி மற்றும் இயற்கை அனர்த்தங்கள் என்பன உலகளாவிய ரீதியில் எதிர்நோக்கப்படும் மூன்று முக்கிய ஆபத்துக்கள் என 2019 ஆம் ஆண்டு அறிக்கை குறிப்பிடுகின்றது. எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய முதல் 10 ஆபத்துக்களில் இந்த மூன்றும் இடம்பிடித்துள்ளன.[1]

183 நாடுகளுக்கான மோசமான காலநிலை நிகழ்வுகளினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை ஆராயும் ஜேர்மன்வோட்ச்சின் உலகளாவிய காலநிலை ஆபத்துப் பட்டியலில், 2017 ஆம் ஆண்டில் புவேர்ட்டோ ரிக்கோ, இலங்கை மற்றும் டொமினிக்கா ஆகியவை அதிகம் பாதிக்கப்பட்ட முதல் மூன்று நாடுகளாக பட்டியலிடப்பட்டுள்ளன.[2]

'அனர்த்த முகாமைத்துவம்' என்பது இயற்கையான, மனிதர்களினால் உருவாக்கப்பட்ட, தொழில்நுட்ப மற்றும் உயிரியல் ஆபத்துகளினால் ஏற்படும் அழிவுகரமான தாக்கங்களை குறைப்பதற்கென உருவாக்கப்பட்ட கட்டமைப்புக்களை குறிக்கும்.

## 1.2. இலங்கையின் நிலை

இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும் நிகழும் மூன்று பொதுவான இயற்கை அனர்த்தங்கள் வெள்ளம், வறட்சி மற்றும் நிலச்சரிவு ஆகியன. இதன் மூலம் ஏராளமான மக்களின் வாழ்க்கையும், வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகின்றது. 2009 முதல் 2018 ஆம் ஆண்டு வரையில், கிடைத்துள்ள தகவல்களின் பிரகாரம் சுமார் 1.98 மில்லியன் மக்கள் வருடாந்தம் வெள்ளம், வறட்சி மற்றும் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.[3] 1998-2017 காலப்பகுதியில் இலங்கையில் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்பட்டுள்ள பொருளாதார இழப்புக்கள் ஆண்டுக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.3 சதவீதம் என கணக்கிடப்பட்டுள்ளது.[4]

2004 ஆம் ஆண்டில் நாட்டில் பேரழிவை ஏற்படுத்திய சுனாமிக்குப் பின்னர், 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இல. அனர்த்த முகாமைத்துவ சட்டம் இலங்கையில் கொண்டுவரப்பட்டது.[5] இந்த சட்டம் இலங்கையில் அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பிற்கான அடித்தளத்தை இட்டது. 'பேரிடர்களினால் ஏற்படக்கூடிய விளைவுகளில் இருந்து மனித உயிர்கள், உடைமைகள் மற்றும் இலங்கையின் சுற்றுச்சூழலை பாதுகாப்பது' இந்தக் கட்டமைப்பின் நோக்கம் ஆகும்.[6] பேரிடர்களினால் இலங்கை எதிர்கொள்ளும் அபாயங்கள் மற்றும் தாக்கங்கள் அதிகம் என்பதனால், நாட்டில் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பு இருப்பதுடன், அதனை சிறப்பாக நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம் ஆகும்.

## 1.3. ஆய்வறிக்கை

2005 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின் விளைவாக, இலங்கையிடம் போதுமான அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பொன்று காணப்படுகின்றது. சட்டத்தின் மூலமாக தேசிய அனர்த்த முகாமைத்துவ பேரவை (தே.அ.மு.பே) உருவாக்கப்பட்டுள்ளது. இது அனர்த்த முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கு பொறுப்பான உச்ச அமைப்பாகும். எனினும், இந்தக் கட்டமைப்பானது நடைமுறையில் ஏன் பயனுள்ள அனர்த்த முகாமைத்துவத்தை வழங்க முடியவில்லை என்பதை பின்வரும் தகவல்கள் ஓரளவு விளக்குகின்றன.

**முறை:** இலங்கையில் அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பு, நிர்வாக மட்டத்தில் எவ்வாறு செயற்படுகின்றது என்பதனை அறிய Verité Research தகவலுக்கான உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி தகவல்களைத் திரட்டியுள்ளது.[7]

**கண்டுபிடிப்புக்கள்:** இலங்கையின் அனர்த்த முகாமைத்துவத்தின் குறைபாட்டிற்கு தே.அ.மு.பேரவையின் இரண்டு முக்கிய நிர்வாகத் தவறுகள் காரணம் என ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது:

1. முடிவுகளை எடுப்பதற்கு தே.அ.மு.பே கூடவில்லை.

2.தே.அ.மு.பே முக்கிய பொறுப்புக்களை புறக்கணித்துள்ளது.

## 1.4. நிர்வாகத் தோல்விகள்

இலங்கையில் ஏற்கனவே உள்ள அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பின் விதிகளை நடைமுறைப்படுத்த தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்கள் தவறிவிட்டதை இந்த ஆய்வறிக்கை கண்டறிந்துள்ளது.

இந்த ஆய்வில் உள்ள படிப்பினைகள் பிற துறைகளுக்கும் பொதுவானது. இலங்கையின் பிற துறைகளிலும், குறிப்பாக கழிவு மேலாண்மை, மின்சார உற்பத்தி முதல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் தேசியப் பாதுகாப்பிலும் இவ்வாறான நிர்வாகத் தவறுகள் காணப்படுகின்றன.

இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும் உயிர்களும், வாழ்வாதாரங்களும் இழக்கப்படுகின்றன – சில சமயங்களில் இது பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் நிர்வாகக் கட்டமைப்புக்கள் இன்மையால் இந்த நிலைமை ஏற்படவில்லை. மாறாக ஏற்கனவே உள்ள கட்டமைப்புக்களின் நிர்வாகத் தோல்விகள் காரணமாகவே இது ஏற்படுகின்றது.

இலங்கையில் புதிய சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் நிர்வாக கட்டமைப்புக்களை உருவாக்குவதற்கு அதிக நேரம் செலவிடுவதற்குப் பதிலாக, நிர்வாகத்தில் உள்ள பலவீனங்கள் மற்றும் தவறுகளை சரிசெய்வதில் கவனம் செலுத்த வேண்டும் என இந்த ஆய்வு பரிந்துரைக்கின்றது.

## 2. முக்கிய கண்டுபிடிப்புக்கள்

அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பில் தே.அ.மு.பே உச்ச அமைப்பாகும். இக்கட்டமைப்பானது அனர்த்த முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பது, திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்வது மற்றும் அவசரகால நிலைமைகளின் போது பதிலளிப்பதற்கு பொறுப்பானதாகும். (தே.அ.மு.பேயின் முக்கிய செயற்பாடுகளை விரிவாக அறிந்து கொள்வதற்கு பின் இணைப்பு 1 ஐ பார்க்கவும்). அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பினை நிர்வகிக்கும் முக்கிய அமைப்புக்களை வழிநடத்தும், ஒருங்கிணைக்கும் மற்றும் மேற்பார்வையிடும் அமைப்பும் இதுவாகும். இதில் அடங்கியுள்ள அமைப்புக்கள்: (i) அனர்த்த முகாமைத்துவ அமைச்சு (ii) அனர்த்த முகாமைத்துவ நிலையம் (DMC) (iii) வளிமண்டலவியல் திணைக்களம் (iv) தேசிய கட்டிட மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்.[8]

தே.அ.மு.பேரவையின் தலைவர் மற்றும் உபதலைவராக முறையே ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளனர். மீதமுள்ள உறுப்பினர்களில் இதனுடன் தொடர்புடைய அமைச்சர்கள், எதிர்கட்சித்தலைவர், எதிர்கட்சியின் பிரதிநிதிகள் மற்றும் மாகாண சபைகளின் பிரதிநிதிகள் அடங்குகின்றனர்.[9] ஆதலால் அனர்த்த அபாயக் குறைப்புக்கான சென்டாய் கட்டமைப்பின் அடிப்படையில் தே.அ.மு.பேரவையானது உருவாக்கப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு ஜப்பானின் சென்டாய் நகரில் நடைபெற்ற அனர்த்த அபாயக் குறைப்புக்கான மூன்றாவது ஐநா உலக மாநாட்டில் ஒப்புதல் வழங்கப்பட்ட முக்கிய உடன்படிக்கைகளில் இந்தக் கட்டமைப்பு ஒன்றாகும். (WCDRR).[10]

இரண்டு முக்கிய கண்டுபிடிப்புக்கள்: (அ) தே.அ.மு.பே முடிவுகளை எடுப்பதற்கு கூடவில்லை (ஆ) தே.அ.மு.பே தனது முக்கிய பொறுப்புக்களை புறக்கணித்துள்ளது.

### 2.1. தே.அ.மு.பே முடிவுகளை எடுப்பதற்காக கூடவில்லை

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவதற்கும், முடிவுகளை எடுப்பதற்குமான பொறுப்பினையும், அதிகாரத்தையும் அனர்த்த முகாமைத்துவ சட்டம் தே.அ.மு.பேரவைக்கே வழங்கியுள்ளது.

தகவலுக்கான உரிமைச்சட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட தகவல்களின்படி, தே.அ.மு.பே முடிவுகளை எடுக்கத் தவறியதற்கான இரண்டு காரணங்கள் தெரியவந்துள்ளன: (அ) சட்டத்தினால் கட்டாயமாக்கப்பட்ட கூட்டங்களை நடத்தத் தவறியமை (ஆ) கூட்டங்களில் முடிவு எடுப்பதற்கு தேவையான உறுப்பினர்கள் வருகை தராமை.

#### *2.1a. சட்டத்தின் பிரகாரம் தேவைப்படும் கூட்டங்களை நடத்த தே.அ.மு.பே தவறியமை*

அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு 5 (1) பிரகாரம், 'தே.அ.மு.பே தேவைப்படும் போது சந்திக்கலாம், குறைந்த பட்சம் மூன்று மாதத்தில் ஒரு தடவையாவது சந்திக்க வேண்டும்'. அதாவது குறைந்த பட்சம் ஆண்டுக்கு நான்கு தடவைகள் சந்திக்க வேண்டும். எனவே, 2005 மே மாதம் அனர்த்த முகாமைத்துவ சட்டம் அமுலுக்கு வந்தது முதல், 2018 டிசம்பர் வரையில் குறைந்த பட்சம் 54 தடவைகள் சந்தித்திருக்க வேண்டும். [11]

தகவலுக்கான உரிமைச்சட்டத்தின் மூலம் பெறப்பட்ட தகவலின் அடிப்படையில், டிசம்பர் 2018 வரையில் தே.அ.மு.பே 13 தடவைகள் மாத்திரம் சந்தித்துள்ளமை தெரியவந்துள்ளது - இது சட்டத்தினால் கட்டாயமாக்கப்பட்டுள்ள குறைந்த பட்சத்தை விட 75 சதவீதம் குறைவாகும். சட்டத்தின் விதிமுறையைப் பின்பற்றி இதுவரை ஒரு வருடம் கூட நான்கு சந்திப்புக்கள் நடைபெறவில்லை. தே.அ.மு.பே 2006, 2008, 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஒரு தடவை கூட அமர்வுகளை நடத்தவில்லை. அத்துடன் 2005, 2007, 2009, 2010, 2012, 2013, 2015 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ஒரு தடவை மாத்திரமே அமர்வுகளை நடத்தியுள்ளது. தே.அ.மு.பே ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இலங்கையில் இதுவரை 31 அனர்த்த சம்பவங்கள் பதிவாகியுள்ளன. எனினும், இதுவரையில் தே.அ.மு.பே 13 தடவைகள் மாத்திரமே சந்தித்துள்ளன. இதில் 9 அனர்த்த சம்பவங்கள் மாத்திரமே கலந்துரையாடப்பட்டுள்ளன.[12]

அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு 5 (3) பிரகாரம் தலைவர் (ஜனாதிபதி), உபதலைவர் (பிரதமர்) சந்திப்புக்களில் கலந்துகொள்ளாதது கூட்டங்களை நடத்துவதற்கு தடையாக அமையாது. ஜனாதிபதி மற்றும் பிரதமர் கலந்துகொள்ளாவிட்டாலும் பேரவையின் உறுப்பினர்கள் சந்தித்து கூட்டங்களுக்கு தலைமை தாங்குவதற்கு ஒரு உறுப்பினரை தெரிவு செய்து கொள்ளலாம்.[13]

#### *2.1b. முடிவெடுப்பதற்கு தேவையான உறுப்பினர்கள் வருகை தராமை*

தே.அ.மு.பேரவையின் சந்திப்புக்களில் முடிவுகளை எட்டுவதற்கு அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு 6 (1) பிரகாரம், பேரவையின் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் கலந்துகொள்ள வேண்டும்.[14] பேரவையில் 43 உறுப்பினர்கள் உள்ளனர். எனவே, தே.அ.மு.பே செயற்படுவதற்கு குறைந்த பட்சம் 14 உறுப்பினர்கள் தேவை. தே.அ.மு.பேரவையின் 13 கூட்டங்களில் பத்தில் கலந்துகொண்டவர்களின் விபரங்கள், தகவலுக்கான உரிமைச்சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த 10 கூட்டங்களில் ஆறில் மாத்திரமே முடிவுகளை எடுப்பதற்கு தேவையான உறுப்பினர்கள் வருகை தந்துள்ளனர்.

இந்த ஆறு கூட்டங்களிலும் கூட விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர்கள் (உறுப்பினர்களாக இருப்பதுடன், அமைச்சரவை மட்டத்தில் முடிவுகளை ஆதரிக்கவும், அங்கீகரிக்கவும் கூடியவர்கள்) கலந்துகொள்ளவில்லை. மாறாக பிரதி அமைச்சர்கள், கூடுதல் செயலாளர்கள் மற்றும் பிற அரசாங்க அதிகாரிகளே அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி கூட்டங்களில் கலந்துகொண்டனர்.

### 2.2. தே.அ.மு.பே அதன் முக்கிய பொறுப்புக்களை புறக்கணித்துள்ளது

அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம் 'அனர்த்தத்தினை அல்லது வரவிருக்கும் அனர்த்தத்தினை எதிர்கொள்வதற்கு தே.அ.மு.பே அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்' என எதிர்பார்க்கப்படுகின்றது.[15] அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, வளிமண்டலவியல் திணைக்களம் ஆகியவற்றின் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை மேற்பார்வையிடும் அதிகாரத்தை இந்த அமைப்பு கொண்டுள்ளது.

(பின் இணைப்பு 2ஐ பார்க்கவும்). இந்த அனைத்து அமைப்புக்களும் முறையாக செயற்படுவது அனர்த்த முகாமைத்துவ முயற்சிகளை அமுல்படுத்துவதற்கு முக்கியமானது. அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளில் இந்த நிலையங்கள் அனைத்தும் தே.அ.மு.பேரவைக்கே பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ளன.

எனவே, தே.அ.மு.பே குறைந்தபட்சம் சட்டத்தினால் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையில் கூட்டங்களை நடத்தத் தவறியமை இலகுவில் தொடர்தாக்கத்தை ஏற்படுத்தும் - இதன் காரணமாக அனர்த்தங்களை குறைப்பதற்கும், முன்கூட்டியே தயார்நிலையில் இருப்பதற்கும் முடியாது போகும். இந்த தோல்விகளினால் ஏற்பட்டுள்ள இரண்டு முக்கிய விளைவுகள். (அதாவது கூட்டங்களை நடத்தத் தவறியமை, சந்திப்புக்களின் போது முடிவுகளை எடுப்பதற்கான குழுவை அமைக்கத் தவறியமை): (அ) முக்கிய விடயங்களில் அனுமதி வழங்குவதற்கு காலதாமதம் (ஆ) செயற்பாடுகளில் இடைநிறுத்தம்.

### 2.2a. *முக்கிய முடிவுகளுக்கான ஒப்புதலை தே.அ.மு.பே தாமதப்படுத்தியது*

தே.அ.மு.பேரவையின் கூட்டங்களுக்கு இடையே காணப்பட்ட நீண்ட இடைவெளிகளினால் முக்கியமான விடயங்களில் முடிவுகளை எட்டுவதில் தாமதம் காணப்பட்டது, இதற்கு தே.அ.மு.பேரவையே பொறுப்புக்கூற வேண்டும்.

உதாரணமாக, 'பாதுகாப்பான இலங்கையை நோக்கி, அனர்த்த முகாமைத்துவத்திற்கான வரைபடம் 2005 – 2015' என்ற முக்கியமான ஆவணத்திற்கு இணங்க (i) முழுமையான கொள்கை (ii) தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் மற்றும் (iii) தேசிய அவசரகால செயற்பாட்டுத் திட்டம் என்பன 2 ஆண்டுக்குள் முடிவுக்கு வந்திருக்க வேண்டும். வரைபடம் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளியிடப்பட்டது. எனவே மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்/ஒப்புதல்கள் டிசம்பர் 2007 ஆம் ஆண்டுக்குள் நிறைவடைந்திருக்க வேண்டும். எனினும், முழுமையான கொள்கை மற்றும் தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் என்பன முறையே 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிலேயே நிறைவடைந்தன.

மேலும், தேசிய அவசரகால செயற்பாட்டுத் திட்டத்திற்கான வரைபு அறிக்கை கூட இந்த அறிக்கை எழுதப்படும் வரையில் தே.அ.மு.பேரவையின் ஒப்புதலுக்காக வழங்கப்படவில்லை.


அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் செயற்றிட்டங்கள் காலதாமதத்திற்கு பின்னரே ஒப்புதல் அளிக்கப்பட்டமை தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட அறிக்கைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சில சமயங்களில், ஒப்புதல் கிடைக்கும் போது, திட்டமிடல் செயற்பாடுகளுக்கான காலம் முன்னரே முடிவடைந்திருந்தது. உதாரணமாக, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வருடாந்த செயற்றிட்டங்கள் 2015 ஆம் ஆண்டு மே 11 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்திலேயே தே.அ.மு.பேரவையினால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தது.

### 2.2b. *செயற்படுவதற்கு தே.அ.மு.பே தடையாக இருந்தது*

தே.அ.மு.பே கூட்டங்கள் முறையாக நடைபெறாததால், அனர்த்த முகாமைத்துவ நிலையம் போன்ற அமைப்புக்கள் திட்டங்களை வகுக்கவும், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதிலும் தடைகள் காணப்பட்டன.

அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு 10 (3) அமைச்சுக்கள், அரசாங்கத் திணைக்களங்கள், பொது நிறுவனங்கள் விரிவான அனர்த்த முகாமைத்துவ திட்டங்களை தயாரித்து சமர்ப்பிப்பதை அறிவுறுத்தும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடும் அதிகாரத்தை தே.அ.மு.பேரவைக்கு வழங்கியுள்ளது. அத்துடன் அவர்கள் அதனை சமர்ப்பிப்பதற்கான கால எல்லையை குறிப்பிடவும் அதிகாரம் அளிக்கின்றது.[16] இது அனர்த்த முகாமைத்துவ தயார்நிலையின் ஆரம்பக் கட்டமாகக் கருதப்படுகின்றது.

> 'அனைத்து அமைச்சு, அரசாங்க திணைக்களங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பேரவை தீர்மானிக்கும் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ விரிவான அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை சமர்ப்பிக்க வேண்டும்.




> ஏதாவது அனர்த்தம் நிகழ்ந்தால் அல்லது வரவிருக்கும் அனர்த்தத்தை எதிர்கொள்வதற்கு குறித்த அமைச்சு, அரச திணைக்களம் மற்றும் பொது நிறுவனம் எடுக்க உத்தேசித்திருக்கும் நடவடிக்கைகள் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும்.'

எனினும், 2005 டிசம்பர் முதல் அதாவது 14 வருடங்களாக, ஆரம்ப வர்த்தமானி அறிவித்தலை இதுவரை தே.அ.மு.பே வெளியிடவில்லை. எனவே, ஒப்புதல்களை வழங்குவதில் மாத்திரமன்றி, குறித்த நடவடிக்கைகள் எடுக்கப்படக்கூடிய அனர்த்த முகாமைத்துவ திட்டங்களை வகுப்பதிலும் தே.அ.மு.பே காலதாமதப்படுத்தியுள்ளது.

சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தே.அ.மு.பேரவையின் சந்திப்புக்கள் நடைபெறாத காரணத்தினால் தங்களது நடவடிக்கைகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தனது 2010 ஆம் ஆண்டுக்கான திட்டத்தில் குறிப்பிட்டுள்ளது.[17] இதே விடயம் 2011 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (UNDP) அனர்த்த முகாமைத்துவ மதிப்பீட்டிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.[18] இந்த அவதானிப்புக்கள் இந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் மூலம் கண்டறியப்பட்ட தகவல்களுடன் ஒத்துப்போகின்றன.

## பேரவையின் சந்திப்புக்களில் முக்கியமான உறுப்பினர்கள் வருகை தந்திருக்கின்றார்களா?




°நிர்வாகக் குழுவில் எதிர்க்கட்சியின் 5 உறுப்பினர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.˚ குழு உறுப்பினர்களில் 25 விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர் (இங்கு 9 உறுப்பினர்கள் மாத்திரமே மாதிரிக்காக குறிப்பிடப்பட்டுள்ளனர்).
°°ஜனாதிபதி மற்றும் பிரதமர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அமைச்சரவையின் அமைச்சர்களாக கருத்தில் கொள்ளப்படவில்லை.
+2007 ஆம் ஆண்டில் பேரவையில் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.
++2010 ஆம் ஆண்டில் பேரவையில் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.
**தே.அ.மு.பேரவையின் உறுப்பினராக தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டத்தில் மாத்திரமே அமைச்சர் உள்ளடக்கப்பட்டுள்ளார்.

மூலம்: தேசிய அனர்த்த முகாமைத்துவப் பேரவையின் வருகைப் பட்டியல் மற்றும் கூட்டத்தின் குறிப்புக்கள்.

## 3. முக்கிய புரிதல்கள்

பல்வேறு அனர்த்தங்கள் ஏன் முறையாக நிர்வகிக்கப்படவில்லை, வழக்கமாக ஏற்படும், ஏற்கனவே அறியப்பட்ட பேரழிவு அபாயங்கள்/நிகழ்வுகளுக்கு முகங்கொடுக்க நாடு ஏன் தயாராக இல்லை என்பதற்கு தே.அ.மு.பேரவையின் தோல்வி விளக்கத்தை அளிக்கின்றது. இந்த நிர்வாகத் தோல்வி இலங்கையில் உயிர்கள் மற்றும் பொருளாதாரத்தில் விரும்பத்தகாத விளைவுகளைக் கொண்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் தே.அ.மு.பே கூட்டங்களை விட அதிக அனர்த்தங்கள் இடம்பெற்றுள்ளன (பின் இணைப்பு 4ஐ பார்வையிடவும்). தே.அ.மு.பே முடிவுகளை எடுப்பதற்கான கூட்டங்களை நடத்தாததுடன், ஒப்புதல் அளித்தல், கட்டளையிடுதல் மற்றும் மேற்பார்வையிடுதல் போன்ற அதன் முக்கிய பொறுப்புக்களை நிராகரித்துள்ளது.

தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தொடர்ந்தும் நிர்வாகத் தோல்வி காணப்படுகின்றது. இதன் விளைவால் அனர்த்த ஆபத்துக்களை கட்டுப்படுத்துவதற்கு இலங்கை தயார் நிலையில் இல்லை. அனர்த்த முகாமைத்துவத்தை திட்டமிடத் தவறியது, அனர்த்த முகாமைத்துவத்தில் தோல்வியடைவதற்கான திட்டமாக மாறும் சூழ்நிலையை நிர்வாகத் தவறுகள் உருவாக்கியுள்ளன.

அனர்த்த முகாமைத்துவத்தின் நிர்வாகத் தோல்விகளை விளக்கும் வகையில் தனித்தன்மையான தடைகள் இருந்தன என்பதை இந்த ஆய்வுக்கட்டுரை மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆராய்ச்சிகள் பரிந்துரைக்கவில்லை. மாறாக, தற்போதைய பொதுத்துறையில் இவ்வாறான நிர்வாகத் தோல்விகள் முக்கிய அம்சமாகக் காணப்படலாம் எனக் குறிப்பிடுகின்றது.

# பின் இணைப்பு 1: தே.அ.மு.பேரவையின் செயற்பாடுகள்

1. இயற்கை அனர்த்தங்களை நிர்வகிப்பது தொடர்பில் தேசியக் கொள்கை மற்றும் திட்டத்தை வகுத்தல்

2. தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் மற்றும் தேசிய அவசரகால செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல்.

3. தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் மற்றும் தேசிய அவசரகால செயற்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணித்தல்.

4. இயற்கை அனர்த்தத்தின் போது அவசரகால தொடர்புகள், மீட்பு, நிவாரணம், மறுவாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

5. திட்டங்களுக்கு அமைவாக அனர்த்தங்களின் போது அல்லது வரவிருக்கும் அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

6. அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் பொருத்தமான பிற அமைப்புக்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதுடன், கண்காணித்தல்.

7. தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் மற்றும் தேசிய அவசரகால செயற்பாட்டுத் திட்டம், போதுமான அளவு விளம்பரப்படுத்தப்பட்டுள்ளதை உறுதிசெய்தல்.

8. பிரிவு 10இன் பிரகாரம் அனர்த்த முகாமைத்துவ திட்டங்களை தயாரிக்கும் போது அனைத்து அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்களை குறிப்பிடுதல்.

9. அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் விழிப்புணர்வு பிரச்சாரங்களை ஊக்குவித்தல் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு நிதி வழங்குதல்.

10. அனர்த்தத்தின் போது அல்லது அனர்த்தத்திற்கான சாத்தியம் உள்ள போது உள்ளூர் மக்களுக்கு உதவுதல் மற்றும் சமூகங்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்வதற்கு உதவுதல்.

11. ஆபத்து, பாதிப்பு மற்றும் பாதிப்புக்களை குறைக்கும் ஆய்வுகள் மற்றும் நடவடிக்கைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நபர்கள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து அவ்வாறான ஆய்வுகள் மற்றும் நடவடிக்கைத் திட்டங்களுக்கு உதவுதல்.


12. அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கான செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை நிர்ணயித்தல்.

13. அனர்த்தங்களைத் தவிர்த்தல் மற்றும் அதன் தாக்கங்களை குறைப்பது தொடர்பிலான திட்டங்களை ஆரம்பித்தல், நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பினை முன்னெடுத்தல்.

14. உண்மையில் அனர்த்தம் இடம்பெறும் போது அல்லது அனர்த்தத்திற்கான சாத்தியம் உள்ள சந்தர்ப்பங்களில் அதனுடன் தொடர்புடைய அனைத்து விடயங்களிலும் அமைச்சரவையை மதிப்பிடுதல்.

15. அனர்த்த முகாமைத்துவத்திற்கான நிதியினை பொருத்தமான அமைப்புக்கள் மற்றும் 1993 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு நிதி சட்டம் மூலம் ஒதுக்கீடு செய்வதற்கு பரிந்துரைத்தல்.

# பின் இணைப்பு 2: தே.அ.மு.பேரவையின் செயற்பாடுகள்



# பின் இணைப்பு 3: தே.அ.மு.பேரவைக்கான வருகை 2005-2018

| நடைபெற்ற பத்து கூட்டங்களில் கலந்துகொண்ட கூட்டங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்கள் அல்லது பிரதிநிதிகள்** |
|---|---|
| பூச்சியம் | எதிர்க்கட்சித் தலைவர்<br>எதிர்கட்சியினால் பரிந்துரைக்கப்பட்ட ஐவரில் நான்கு உறுப்பினர்கள்<br>விவசாயத்திற்கு பொறுப்பான அமைச்சர்*<br>நெடுஞ்சாலைகளுக்குப் பொறுப்பான அமைச்சர் |
| ஒன்று | கடற்றொழில், நீரக வள மூலங்களுக்கு பொறுப்பான அமைச்சர்<br>வட மேல், கிழக்கு, தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் முதலமைச்சர்கள் /ஆளுநர்கள்<br>பாதுகாப்பு மற்றும் பொலிஸ் அமைச்சர்<br>நிதி அமைச்சர் |
| இரண்டு | சுற்றாடல் மற்றும் கரையோரப் பாதுகாப்பு அமைச்சர்<br>காணிக்குப் பொறுப்பான அமைச்சர்<br>மின்வலு அமைச்சர்<br>வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்<br>புனர்வாழ்வு அமைச்சர்[19]<br>வட, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் முதலமைச்சர்கள் /ஆளுநர்கள் |
| மூன்று | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்<br>வீடமைப்புக்கு பொறுப்பான அமைச்சர்<br>நகர அபிவிருத்தி அமைச்சர்<br>கல்வி அமைச்சர்<br>தொழில்துறை அமைச்சர் [20] |
| நான்கு | பிரதமர்<br>சமூக நலனோம்புகை அமைச்சர்<br>புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர்<br>உள்நாட்டலுவல்கள் அமைச்சர்<br>சுகாதார அமைச்சர்<br>பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் [21]<br>எதிர்கட்சியினால் பரிந்துரைக்கப்பட்ட ஐவரில் ஒரு உறுப்பினர்<br>மேல் மற்றும் வட மத்திய மாகாணங்களின் முதலமைச்சர்கள் /ஆளுநர்கள் |
| ஐந்து | நீர்ப்பாசன அமைச்சர் |
| ஆறு | யாருமில்லை |

| | |
|---|---|
| ஏழு | நீர் வழங்கலுக்குப் பொறுப்பான அமைச்சர் |
| எட்டு | யாருமில்லை |
| ஒன்பது | ஜனாதிபதி |
| அனைத்தும் | அனர்த்த முகாமைத்துவம் மற்றும் தேசிய கட்டிட அமைச்சர்[22] |

*அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு 3 (1) (டி), விவசாய அமைச்சர் தேசிய அனர்த்த முகாமைத்துவ பேரவையின் உறுப்பினராக குறிப்பிடப்படவில்லை என்பதனை கவனத்தில் கொள்ளவும். எனினும், விவசாய அமைச்சர் தேசிய அனர்த்த முகாமைத்துவ பேரவையினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டத்தில் (NDMP) தேசிய அனர்த்த முகாமைத்துவ பேரவையின் உறுப்பினராக உள்ளடக்கப்பட்டுள்ளார்.

**இந்த ஆய்வின் நோக்கத்திற்காக, பேரவையின் கூட்டங்களுக்கு ஜனாதிபதி மற்றும் பிரதமரின் வருகையானது முறையே அவர்களது தலைவர் மற்றும் உப தலைவர் பதவிகளை பிரதிநிதித்துவப்படுத்தியே கவனத்தில் கொள்ளப்படுகின்றது. ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் வழங்கப்பட்டுள்ள அமைச்சுப் பதவிகளுக்கு அமைய அவர்கள் செயற்பட வேண்டும் என கருதப்படவில்லை. பிரிவு 3 (5) இன் பிரகாரம், 'உப பிரிவு (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சானது ஜனாதிபதி தமக்கோ அல்லது பிரதமருக்கோ ஒதுக்கியிருந்தால், ஜனாதிபதி அல்லது பிரதமரினால் பரிந்துரைக்கப்பட்ட நபர் பேரவையில் ஜனாதிபதியை அல்லது பிரதமரை பிரதிநிதித்துவப்படுத்தலாம்' என குறிப்பிடப்பட்டுள்ளதைக் கவனத்தில் கொள்ளவும்.

# பின் இணைப்பு 4: தே.அ.மு.பே அமைக்கப்பட்டதன் பின்னர் இடம்பெற்ற முக்கிய அனர்த்தங்கள்*

| திகதி | அனர்த்தத்தின் வகை | | |
|---|---|---|---|
| செப்டெம்பர் 2018 | வறட்சி | 890,000 | 17 மாவட்டங்கள் - புத்தளம், அநுராதபுரம், மன்னார் மற்றும் முல்லைத்தீவு அதிகளவில் பாதிக்கப்பட்டன |
| டிசம்பர் 2018 | வெள்ளம் | 75,000 | முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் |
| மே – ஜூன் 2018 | வெள்ளம் மற்றும் நிலச்சரிவு | 175,000–26 உயிரிழப்புக்கள் | 19 மாவட்டங்கள்- புத்தளம், கம்பஹா, இரத்தினபுரி, கொழும்பு, குருநாகல், களுத்துறை மற்றும் கேகாலை |
| மே – ஓகஸ்ட் 2017 | வெள்ளம் மற்றும் நிலச்சரிவு | 415,600–213 உயிரிழப்புக்கள் | கம்பஹா, காலி, அம்பாந்தோட்டை, களுத்துறை, கேகாலை, மாத்தறை மற்றும் இரத்தினபுரி உள்ளடங்கலாக 12 மாவட்டங்கள் |
| ஒக்டோபர்2016 – ஒக்டோபர் 2017 | வறட்சி | 2,200,000 | 19 மாவட்டங்கள் - முக்கியமாக கிழக்கு, வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்கள் |
| மே 2016 | வெள்ளம் மற்றும் நிலச்சரிவு | 301,602–104 உறுதிசெய்யப்பட்ட உயிரிழப்புக்கள், காணாமல் போனோர் 99 (அரநாயக்க உள்ளடங்கலாக) | 22 மாவட்டங்கள் |
| ஒக்டோபர்–நொவம்பர் 2015 | வெள்ளம் மற்றும் நிலச்சரிவு | 138,676 | 14 மாவட்டங்கள் - யாழ்ப்பாணம் அதிகளவில் பாதிக்கப்பட்டது |
| டிசம்பர்–ஜனவரி 2015 | வெள்ளம் மற்றும் நிலச்சரிவு | 1,100,000–39 உயிரிழப்புக்கள் | 22 மாவட்டங்கள் |
| ஏப்ரல்–டிசம்பர் 2014 | வறட்சி | 1,800,000 | 16 மாவட்டங்கள் |
| ஜூன் – நொவம்பர் 2014 | வெள்ளம் மற்றும் நிலச்சரிவு | 104,476–27 உயிரிழப்புக்கள் | 11 மாவட்டங்கள் |
| ஜூலை 2013 | புயல் - எச்சரிக்கை விடுக்கப்படவில்லை | 54 மீனவர்கள் உயிரிழப்பு | தென்மேற்கு கரையோரம் |
| மே 2013 | புயல் | 3,881 - 7 உயிரிழப்புக்கள் | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் |
| டிசம்பர் 2012 | வெள்ளம் மற்றும் நிலச்சரிவு | 300,000–36 உயிரிழப்புக்கள் | 20 மாவட்டங்கள் |
| ஒக்டோபர்-டிசம்பர் 2012 | வறட்சி | 1,800,000 | 7 மாவட்டங்கள் |
| ஏப்ரல் 2012 | சுனாமி எச்சரிக்கை** | | |
| மார்ச் 2012 | புயல் | 896 குடும்பங்கள் | வவுனியா மாவட்டம் |
| நொவம்பர் 2011 | புயல் மற்றும் வெள்ளம் | 66,286–29 உயிரிழப்புக்கள் (22 மீனவர்களின் உயிரிழப்புக்கள் பதிவாகின) | 14 மாவட்டங்கள் |

| | | | |
|---|---|---|---|
| **நொவம்பர் 2010 –பெப்ரவரி 2011** | வெள்ளம் | 1,200,000 | 18 மாவட்டங்கள் - திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் பொலனறுவை அதிகளவில் பாதிக்கப்பட்டன |
| **மே 2010** | வெள்ளம் | 693,000 | 6 மாவட்டங்கள் - கம்பஹா மற்றும் கொழும்பு அதிகளவில் பாதிக்கப்பட்டன |
| **நொவம்பர் 2009** | திடீர் வெள்ளம் | 50,000 குடும்பங்கள் | கிழக்கு மாகாணம் |
| **ஓகஸ்ட் 2009** | திடீர் வெள்ளம் | 20,000 உள்ளக இடம்பெயர்வுக்கு உள்ளான மக்கள் - வவுனியா, 652 குடும்பங்கள் - இரத்தினபுரி | வவுனியா, இரத்தினபுரி, களுத்துறை |
| **ஒக்டோபர் 2008** | வெள்ளம் | 75,000 | கம்பஹா, களுத்துறை, கொழும்பு, மாத்தறை மற்றும் புத்தளம் |
| **ஜூன் 2008** | வெள்ளம் | 418,354 – 23 உயிரிழப்புக்கள் | கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை, காலி மற்றும் மாத்தறை |
| **ஏப்ரல் 2008** | வெள்ளம் | | |
| **டிசம்பர் 2007** | வெள்ளம் | 250,000 | மட்டக்களப்பு |
| **மே 2007** | வெள்ளம் | 50,000 – 11 உயிரிழப்புக்கள் | கரையோரப் பிராந்தியம் |
| **ஜனவரி 2007** | வெள்ளம் | 87,032 – 13 | கிழக்கு, மத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்கள் |
| **டிசம்பர் 2006** | வெள்ளம் | 32,087 | அம்பாறை மற்றும் ஹம்பாந்தோட்டை |
| **நொவம்பர் 2006** | நிலச்சரிவு | | |
| **ஒக்டோபர் 2006** | வெள்ளம் | | |
| **நொவம்பர் 2005** | வெள்ளம் | 8,345 குடும்பங்கள் | கொழும்பு, கம்பஹா மற்றும் திருகோணமலை மாவட்டங்கள் |

*மனிதாபிமான விவகாரங்களை ஒருங்கிணைப்பதற்கான ஐநா அலுவலகத்தின் சிறப்பு டிஜிட்டல் சேவையான ரிலீப்வெப்பினால் (ReliefWeb) தொகுக்கப்பட்டுள்ள அறிக்கைகளைப் பயன்படுத்தியே அனர்த்தங்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மேலதிக தகவல்கள் செய்திகள் மூலம் திரட்டப்பட்டுள்ளன. வறட்சி, புயல், சூறாவளி, வெள்ளம் மற்றும் மண்சரிவு ஆகிய அனர்த்தங்கள் மாத்திரமே இங்கு கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

**அனர்த்தம் ஏற்படவில்லை, எனினும் தே.அ.மு.பேரவையினால் கலந்துரையாடப்பட்டதால் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

# குறிப்புக்கள்

1உலகப் பொருளாதார மன்றம். 2019. "உலக அபாய அறிக்கை 2019, 14 ஆவது பதிப்பு." பார்வையிட: https://www.mmc.com/ insights/publications/2019/jan/global-risks-report-2019.html.

2 ஜேர்மன்வோட்ச். 2019. "உலகளாவிய காலநிலை அபாய அட்டவணை 2019." பார்வையிட: https://www.germanwatch.org/sites/ germanwatch.org/files/Global%20Climate%20Risk%20Index%202019_2.pdf.

3 ஐக்கிய நாடுகள், DesInventar database, பார்வையிட: http://www.desinventar.lk:8081/DesInventar/profiletab.jsp [Accessed on: May 2019].

4 ஜேர்மன்வோட்ச். 2019. "உலகளாவிய காலநிலை அபாய அட்டவணை 2019." பார்வையிட: https://www.germanwatch.org/sites/ germanwatch.org/files/Global%20Climate%20Risk%20Index%202019_2.pdf.

5இலங்கை அரசாங்கம். 2005. "இயற்கை அனர்த்தங்கள் பற்றிய பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கை"பார்வையிட: https://www.parliament.lk/uploads/comreports/1476092317082517.pdf

6முன்னுரை, 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டம்.

7 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச்சட்டம் 2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இயற்றப்பட்டதுடன், 2017 பெப்ரவரி 03 ஆம் திகதி பயன்பாட்டுக்கு வந்தது. பொது நிறுவனங்கள் வசம் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான உரிமையை இந்த சட்டம் இலங்கையர்களுக்கு வழங்குகின்றது

8தே.அ.மு.பேரவையின் முழுமையான செயற்பாடுகளின் பட்டியல் பின் இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ளது.

9பிரிவு 3, 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டம்.

10அனர்த்த அபாயக் குறைப்புக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகம். 2015. "அனர்த்த அபாயக் குறைப்புக்கான செண்டாய் கட்டமைப்பு 2015- 2030". பார்வையிட: https://www.unisdr.org/files/43291_sendaiframeworkfordrren.pdf.

11தே.அ.மு.பேரவை 2005 ஆம் ஆண்டின் இறுதி இரண்டு காலாண்டுகளிலும், 2006 முதல் 2018 வரையான 13 ஆண்டு காலப்பகுதியில் ஒவ்வொரு காலாண்டும் சந்திப்புக்களை முன்னெடுத்திருக்க வேண்டும்.

12அனர்த்த நிகழ்வுகளின் ஆய்வு மற்றும் அதற்கான தே.அ.மு.பேரவையின் பதில் பின் இணைப்பு நான்கில் வழங்கப்பட்டுள்ளது.

13பிரிவு 5 (3), 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டம்.

14பிரிவு 6 (1), 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டம்.

15பிரிவு 4 (e), 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டம்.

16பிரிவு 10 (3), 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டம்.

17அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் திட்டம் 2010 – 2014, 2010 இல் வெளியிடப்பட்டது. பார்வையிட: http://www.dmc.gov.lk/attchments/Corporate%20 Plan/document.pdf.

18ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP). 2011. "UNDPயின் அனர்த்த ஆபத்து திட்ட மதிப்பீட்டின் இறுதி அறிக்கை, இலங்கை." பார்வையிட: https://erc.undp.org/evaluation/documents/download/5316.

19தே.அ.மு.பேரவையில் 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டத்தில் இருந்து அமைச்சு உள்வாங்கப்பட்டது.

20தே.அ.மு.பேரவையில் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டத்தில் இருந்து அமைச்சு உள்வாங்கப்பட்டது.

21தே.அ.மு.பேரவையில் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டத்தில் இருந்து அமைச்சு உள்வாங்கப்பட்டது.

22தே.அ.மு.பேரவையில் 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டத்தில் இருந்து அமைச்சு உள்வாங்கப்பட்டது.